//மிகமிக அவசரம் // //தனிக்கவனம்//

சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை–8
ந.க.எண்.6005/அ4/2023, நாள். 30.08.2023

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு நிதி உதவிபெறும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், சென்னை மாவட்டம் 2023–2024 கல்வி ஆண்டிற்கான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்கள் நிர்ணயம் செய்ய கருத்துருக்கள் அனுப்பக்கோருதல் – சார்ந்து.

பார்வை:
1 அரசாணை (நிலை) எண்.525, கல்வி, நாள்.29.12.1997.
2 குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009.
3 அரசாணை எண்.101, பள்ளிக் கல்வித் (வரவு செலவு–1) துறை, நாள்.18.05.2018.
4 அரசாணை (நிலை) எண்.238, பள்ளிக் கல்வித் (பக6(1)) துறை, நாள்.13.11.2018.

———————

சென்னை மாவட்டத்திலுள்ள அரசு நிதி உதவி பெறும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2023 அன்று நிலவரப்படி, மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்கள் நிர்ணயம் செய்ய பார்வை 1–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2–ல் காணும் இலவச கட்டாயக் கல்விச் சட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிர்ணயம் செய்வதற்கு ஏதுவாக தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அரசு நிதி உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் எந்த ஒரு கலமும் விடுதலின்றி பெற்று சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் தங்கள் கல்வி மாவட்ட பள்ளியை பார்வையிட்டு மாணவர் வருகைப் பதிவேட்டில் பதிந்துள்ளதை ஒப்பிட்டு, EMIS பதிவுகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உறுதிசெய்து அதன் அடிப்படையில் சரிபார்க்கப்பட்டு, பரிந்துரை செய்து **15.09.2023** –க்குள் சென்னை முதன்மைக் கல்வி அலுவலக இருக்கைப் பணியாளரிடம் நேரடியாக ஒப்படைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கருத்துருவில் இணைக்கப்படவேண்டிய முக்கிய ஆவணங்கள்:–**

1) EMIS இணையதளத்தல் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையினை அடிப்படையாககொண்டு உரிய படிவத்தில் மாணவர் எண்ணிக்கையினை பூர்த்தி செய்து மாவட்டக் கல்வி அலுவலர் கையொப்பமிட்டு அனுப்பப்படவேண்டும்.

2) அனைத்து மாணவர்களின் விவரங்கள் மற்றும் பிற பள்ளி சார்பான விவரங்கள் அனைத்தும் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதனை மாவட்டக் கல்வி அலுவலர்

உறுதி செய்துகொண்டு முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள பள்ளிகளின் கருத்துருக்களை மட்டுமே இவ்வலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும். அவ்வாறு முழுமையாக பதிவேற்றம் செய்யப்படாத பள்ளிகளின் கருத்துரு அப்பணி நிறைவடைந்த பின்னரே இவ்வலுவலகம் அனுப்பப்படவேண்டும்.

3) 01.08.2023 நிலவரப்படி பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

4) 01.08.2023 நிலவரப்படி காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிட விவரம் உரிய படிவத்தில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

5) பணியிடத்துடன் ஆசிரியர் உபரி என கண்டயறியப்பட்ட பணியாளர் நிர்ணய ஆணையின் படி பணி மாறுதல் மூலம் சென்றதால் ஏற்பட்ட காலி பணியிடம் இப்பணியிடம் பள்ளிக்கல்வி இயக்குநர் தொகுப்பிற்கு அனுப்பட்டதால் அதன் சார்பான பணியிட நீக்கம் விவரம் அதன் சார்பான குறிப்புகள் எழுதிய அளவை பதிவேடு நகல் மற்றும் வருகை பதிவேடு இணைத்து அனுப்பப்படவேண்டும்.

6) காலிப்பணியிடம் உபரிஎன பணியாளர் நிர்ணய ஆணையின் படி காலி பணியிடம் இப்பணியிடம் பள்ளிக்கல்வி இயக்குநர் தொகுப்பிற்கு அனுப்பட்டதால் அதன் சார்பான பணியிட நீக்கம் விவரம் அதன் சார்பான குறிப்புகள் எழுதிய அளவை பதிவேடு நகல் மற்றும் வருகை பதிவேடு இணைத்து அனுப்பப்படவேண்டும்.

7) தங்கள் பள்ளியில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர் தரம் , பட்டதாரி ஆசிரியர் தரம் மற்றும் இடைநிலை ஆசிரியர் தரத்தில் முன்னுரிமைப்பட்டியல் தயார் செய்து இத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்

மேற்கண்ட அனைத்து படிவங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்று சரிபார்க்கப்பட்டு கருத்துருக்கள் மாவட்டக் கல்வி அலுவலரால் மேலொப்பமிடப்பட்டு உரிய காலகெடுவிற்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

**இணைப்பு**:படிவங்கள்.

ஒம்/-

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
சென்னை மாவட்டம்.